" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2006ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28-ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து***
***ஆற்றின் அடங்கப் பெறின் "***

**பொருள் :** ஒருவன் அறிய வேண்டுவனவற்றை அறிந்து, ஐம்புலன்களையும் தக்க வழியில் அடக்கி ஒழுகினால், அவ்வடக்கம் சான்றோரால் அறியப்பட்டு. மேன்மையை அவனுக்குக் கொடுக்கும்

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

**<u>உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## <u>1) ம.நி.1 / 15883/ 2006</u>

மதுரை மாநகராட்சியில் அயற்பணியின் கீழ், நீதி அலுவலர் / சேர்மன் வரி மேல்முறையீடு ஆகப் பணிபுரியும் திருமதி. T.N. கலைவாணி, நீதிபதி (முதுநிலைப்பிரிவு) அன்னாரின் பணியிடத்திற்கான வரையறை மற்றும் நிபந்தனைகள் (Terms and Conditions) அரசாணை எண். G.O.(Rt.)No.239, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27.11.2006 வெளியிடப்பட்டுள்ளதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :311</u>**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**2) ம.நி.1/28628/2004**

மதுரை மாநகராட்சியில் அயற்பணியின் கீழ் மக்கள் தொடர்பு அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.சிவ.சு.சரவணன்–ஐ மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராகவும், மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றிய திரு.ச.சங்கரவடிவேலு–ஐ மதுரை மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலராகப் பணிமாறுதல் செய்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.454, செய்தி மற்றும் சுற்றுலா (நிர்வாகம்–I) துறை, நாள் : 28.11.2006–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** திரு.ச.சங்கரவடிவேலு மதுரை மாநகராட்சியில் மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலராக 11.12.06 முற்பகல் முதல் பணியேற்றுள்ளார்.)

**மாமன்ற தீர்மானம் எண் :312**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

*" விழிநீர் விழும் முன் – மழைநீர் சேகரி "*

**3) ம.நி.1/5532/02**

தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் நிறுவனம் 31.01.1993–ல் மூடப்பட்டது.(Liquidation). மேற்படி நிறுவனத்தில் பணியாற்றிய திரு.K. ரவிசங்கரை மருந்தாளுநராக மதுரை மாநகராட்சியில் ஈர்த்துக் கொள்ள (absorption) 25.1.2006-ல் மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அரசினரின் அனுமதி கோரப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை (இருபதாண்டு) எண்.68, நாள்: 6.12.2006–ல் திரு.கே.ரவிசங்கரை மருந்தாளுநராக மாநகராட்சிப் பணியில் ஈர்த்துக் கொள்ள தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதார சார்நிலைப் பணி விதிகள், 1996–ல் விதி எண்.3–ஐ தளர்வு செய்தும், அன்னாரை மாநகராட்சி மருந்தாளுநர் பணி மூப்புப் பட்டியலில் இளையவராக வைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், செல்லூர் மகப்பேறு மருத்துவ மையத்தில் 31.5.06 முதல் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடத்தில் பணியிலமர்த்த வரப்பெற்றுள்ள அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**வ.கு.மேயர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்க நடவடிக்கையில் உள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :313**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**4) ம.நி.1/28628/2004**

மதுரை மாநகராட்சியில் தேர்வு நிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.R.J.A.ரவீந்திரன் பொருட்டு 1996–ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது பணியமைப்பு விதிகளில் விதி எண்.3–ஐ தளர்வு செய்து, அன்னாரை மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலராக பதவி உயர்வு அளிக்க மாநகராட்சி ஆணையாளருக்கு (பத்தாண்டு) அனுமதியளித்து அரசாணை எண்.476 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந4) துறை, நாள் : 29.11.06–ல் அரசாணை வெளியிடப்பட்டது.

இது குறித்து செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, மதுரை மாநகராட்சியில் மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் செய்தி மற்றும் சுற்றுலாத் துறை சார்ந்த அலுவலரால் நிரப்பப்படுவது அரசுக்கும் மாநகராட்சிக்கும் நன்மை பயக்குமென்றும், ஆகவே இப்பணியிடம் செய்தி மற்றும் சுற்றுலாதுறை அலுவலர் மூலமே நிரப்பவும் தெரிவிக்கப்பட்டது.

திரு.R.J.A.ரவீந்திரன் தேர்வு நிலை உதவியாளரை மதுரை மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலராக பதவி உயர்வு அளிக்க வெளியிடப்பட்ட மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையை ரத்து செய்தும், திரு.சங்கர வடிவேலு மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலராக பணியேற்க அனுமதித்தும், மதுரை மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.569, நாள் : 22.2.06–ஐ ஏற்று, மதுரை மாநகராட்சியில் திரு.R.J.A.ரவீந்திரன் முன்பு வகித்த சிறப்பு நிலை உதவியாளர் பணியிடத்தை 5500-175-9000 என்ற ஊதிய விகிதத்தில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடமாக நிலை உயர்த்தி (Up Gradation) அப்பணியிடத்தில் அன்னாரை பணியிலமர்த்த வெளியிடப்பட்ட அரசாணை எண்.504, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (மாந4), நாள் : 12.12.2006–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :–** 1. திரு.R.J.A.ரவீந்திரன் உதவி மக்கள் தொடர்பு அலுவலராக 13.12.2006–ல் பணியில் சேர்ந்துள்ளார்.

2. அரசாணையின்படி இப்பணியிடம் தனியாரைச் சார்ந்த பணியிடமாகஇருக்கும் (Person oriented Upgradation) தனியார் மதுரை மாநகராட்சியில் பதவி உயர்வு பெறும்போதோ அல்லது வேறு காரணங்களுக்காக இப்பணியிடம் காலி ஏற்பட்டாலோ உதவியாளர் பணியிடமாக மாற்றம் செய்யப்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் :314**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

## 5) ம. ந. 3 / 22559 / 03

மதுரை மாநகராட்சியில் காலியாக இருந்த தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பணியிடங்களுக்கு கல்வித்தகுதி மற்றும் பணிமூப்பு பட்டியலில் முதல் நிலையில் உள்ள தகுதி வாய்ந்த பணியாளர்களை "Appointment by Transfer" விதிப்படி முற்றிலும் புதிய நியமனமாக பணி அமர்த்த அனுமதிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் + 2 கல்வித் தகுதியுடன் ஆங்கிலம் தட்டச்சுத் தகுதியுடன் விண்ணப்பித்து இருந்த திருமதி. ஆர். சண்முகவள்ளி, பலநோக்கு சுகாதாரப் பணியாளர் தமிழ் தட்டச்சு தேர்வு முடிவிற்காக காத்து இருப்பதாக தெரிவித்ததின் பேரிலும் பணிமூப்பு அடிப்படையில் முதலாவதாக இருந்ததாலும், திருமதி. ஆர். சண்முகவள்ளி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் சமர்ப்பித்த மனுவினை பரிசீலனை செய்ததின் பேரில், தமிழ் தட்டச்சு பயின்ற சான்றிதழை 6 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நியமனக்குழு தீர்மானம் எண் / 25 / நாள்: 03.08.2001ல் "Appointment by Transfer" விதிப்படி முற்றிலும் புதிய நியமனமாக 01.09.2001ல் நியமனம் செய்யப்பட்டார்.

திருமதி. ஆர். சண்முகவள்ளி, குடும்ப சூழ்நிலை காரணமாகவும், உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், 6 மாத காலத்திற்குள் தமிழ் தட்டச்சு சான்றிதழ் பெறாமல் கூடுதலாக 6 மாதங்கள் கழித்து சான்றிதழ் சமர்ப்பித்தற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கையில் அரசின் பின்னேற்பு பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

*" தேக்குவீர் மழைநீரை – பாதுகாப்பீர் குடிநீரை "*

இதன் தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, துணை செயலாளர் அவர்களின் 04.10..2006 தேதிய கடிதத்தில் அரசின் பின்னேற்பு குறித்து மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்ததின் பேரில் திருமதி. ஆர். சண்முகவள்ளி, காலதாமதமாக தமிழ் தட்டச்சு தேர்ச்சி பெற்றதற்கும், மேற்படி தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பணியிடத்தில் "Appointment by Transfer" விதிப்படி புதிய நியமனமாக பணி அமர்த்தியற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :315**

**வழங்கப்பட்ட நிபந்தனை காலத்திற்குள் தட்டச்சு முடிக்காததால் பல்நோக்கு சுகாதார பணியாளராக பணியிறக்கம் செய்ய மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 6) ம.வ.4/15579/2005

மதுரை மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ஸ்காட் ரோடு, மீனாட்சி பஜாரில் மாநகராட்சி அனுமதி பெற்று நடத்தி வருகின்ற திரு. கதிரேசன் கடை எண்.73–க்கு தென்புறத்தில் உள்ள 11 சதுர அடி காலியிடத்தை பயன்படுத்திக் கொள்ள அனுமதி கோரியதின் பேரில், மாநகராட்சி வருவாயை கருத்தில் கொண்டு 1 சதுர அடி ரூ.18 வீதம் 11 சதுர அடிக்கு கூடுதல் வாடகை ரூ.198/-ஐ வசூலிக்கவும் திரும்ப வழங்கப்படாத டெபாசிட் தொகை ரூ.60,000–ம் பெற்றுக் கொண்டும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்படி காலியிடத்தை பயன்படுத்திக் கொள்ள அனுமதித்து உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.15, நாள்.10.7.2006–ல் ஒப்புதல் பெறப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

**மாமன்ற தீர்மானம் எண் :316**

**இந்தக் கடைக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்ட தேதிக்கு முன் ஏற்கனவே அனுமதி பெறாமல் மேற்படி காலியிடத்தை உபயோகப்படுத்தி வந்த காலத்தையும் கணக்கிட்டு அதற்கான வாடகையை அபராதமாக வசூலிக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 7) ம.பொ.3/ 34163/2005

மதுரை மாநகராட்சி குடிநீர் விநியோகம் 1971 ம் ஆண்டு மாநகராட்சி சட்டம் 194, 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204 மற்றும் 205 ன் பிரிவுகளின் படியும் அதன் உபவிதிகளின் படியும் செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது மதுரை மாநகராட்சி பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள், வரிசை வீடுகள், அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் மற்ற தனித்தனி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் முறையிலோ, அல்லது நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகத்தின் வழிகாட்டுதலின் (Graded Structure) வழங்கப்படும் முறையிலோ இணைப்பு வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளது. எனவே அடுக்குமாடி குடியிருப்புகள் வரிசை வீடுகள், குடியிருப்பு வளாகங்கள் ஆகியவைகளுக்கு ஒரே இணைப்பின் மூலம் மொத்தக் குடிநீர் விநியோகம் (Bulk Water Supply) என்ற முறையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் குடிநீர் வழங்கலாம்.

1) நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் என்று கணக்கிட்டு மொத்தக் குடிநீர் இணைப்பு ஒன்று (Bulk Water Supply Connection) நீர் அளவு மானியுடன் (Water Meter) வழங்கலாம்.

2) குடியிருப்புகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள தெருவில் உள்ள மெயின் குழாயிலிருந்து இணைப்பு வழங்க வேண்டும்.

3) மொத்தக் குடிநீர் இணைப்புக் குழாயின் விட்டம், நீளம் ஆகியவைகள் மேலே பத்தி 1ல் குறிப்பிட்டுள்ள படி கணக்கீடு செய்யப்பட்டு, அதற்குத் தகுந்தவாறு மாநகராட்சி அதிகாரிகளால் வடிவமைத்து, ஒரே இணைப்பு மூலம் குடிநீர் வழங்கலாம்.

4) குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள தெருவில் குடிநீர் மெயின் குழாயில் மொத்தக் குடிநீர் இணைப்பு (Bulk Water Supply Connection) வழங்குவதற்கு தேவையான அழுத்தமோ தேவையான அளவுக்கோ குடிநீர் வழங்க இயலாத நிலையில் இருப்பின், அல்லது அதே தெருவில் உள்ள ஏனைய குடிநீர் இணைப்புகளில் பாதிப்பு ஏற்படும் என்ற நிலை இருப்பின் அப்பகுதியில் அமைந்துள்ள பிரதான குடிநீர் விநியோகக் குழாயில் (Main Distribution Pipe Line) இருந்து இணைப்பு வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படும் இணைப்பு குழாய்கள் மற்றும் உதிரிகள், குடியிருப்புகளின் உரிமையாளர்களின் சொந்தச் செலவிலேயே, மாநகராட்சி அதிகாரிகளின் மேற்பார்வையில் அமைத்துக் கொள்ள வேண்டும். எக்காரணத்தை கொண்டும் Feeder Main களில் இணைப்பு வழங்கப்படக் கூடாது.

5) இவ்வாறு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்பு குழாய் மாநகராட்சி அதிகாரிகள் எளிதில் பார்வையிடும் வண்ணம் தரைமட்டத்திலிருந்து 45 செ.மீ. உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்.

6) இக்குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்பு மூலம் பெறப்படும் குடிநீரானது வீட்டு உபயோகத்திற்கு அல்லாமல் வேறு வீட்டு உபயோகமல்லாத இதர காரியங்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாது. இதனை துர் பிரயோகம் செய்வது தெரிந்தால் இணைப்பு துண்டிக்கப்படும்.

7) இக்குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்புக்கு தகுந்த அளவுள்ள நவீன நீர் அளவு மானியை (New Water Meter) தங்கள் சொந்த செலவிலேயே அமைத்து பராமரித்துக் கொள்ள வேண்டும். நீர் அளவுமானியை மாநகராட்சி அதிகாரிகளோ அல்லது அதிகாரம் பெற்ற நபரோ எளிதாக பார்வையிடும் வண்ணம் இருக்க வேண்டும். அளவுமானிகளில் ஏற்படும் பழுதினை அவ்வப்போது சரிசெய்யப்பட்டு எப்பொழுதும் நல்ல முறையில் இயங்கும் வண்ணம் இருக்க வேண்டும்.

8) இக்குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் மொத்தக் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகையானது, ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ. 1000/- என்றும் வீட்டு உபயோகமல்லாத வேறு குடியிருப்புகளுக்கு ரூ. 2000/- என்றும் கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்படும்.

9) இக்குடியிருப்புகளுக்கு வழங்கும் குடிநீருக்கு குடிநீர் கட்டணம் தற்போது நடைமுறையில் உள்ளவாறு 1000 லிட்டருக்கு ரூ. 3.85 வீதம் கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்படும்.

10) மொத்தக் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்களில் தேவையேற்படின், மாமன்ற ஒப்புதலுடன் மாறுதல் கட்டணங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

11) குடிநீர் அளவு மானியில் தொடர்ந்து பழுது இருப்பின், குடிநீர் அளவீடானது முந்தைய காலத்தில் உபயோகப்படுத்தப்பட்ட அளவீட்டின் படி வசூலிக்கப்படும்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடிநீர் வினியோக துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளையும் சேர்த்து அடுக்குமாடி குடியிருப்புகள், வரிசைவீடுகள், குடியிருப்பு வளாகங்களுக்கு மொத்தக் குடிநீர் இணைப்பு (BWSC) வழங்குவதற்கு அரசின் ஒப்புதல் பெற்று நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :317</u>**

**தற்போது பரிசீலனை செய்ய தேவையில்லை என தீர்மானிக்கிறது.**

## <u>8) அ.10/24275/ 2006</u>

மதுரை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழக நிதி மாணவர்களிடமிருந்து அரசு விதிகளில் கூறியவாறு ஒரு மாணவருக்கு ரூ.25/- வீதம் வசூலிக்கப்படுகிறது. பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் நே.மு.க.எண். 049693/பி/02, நாள். 5.6.02-ல் கீழ்கண்டவாறு மேற்படி நிதியிலிருந்து செலவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) கூடுதல் ஆசிரியர் தேவைப்படின் பி.டி.ஏ. மூலம் தீர்மானத்தின் மூலம் நியமனம் செய்யலாம்.

2) கட்டிட வளர்ச்சி மற்றும் தளவாடக் கருவிகள் வாங்குதல்

3) நூலகத்திற்கு தேவையான நூல்கள் வாங்குதல்

4) கற்பித்தலுக்கு தேவையான உபகரணங்கள் வாங்குதல் போன்ற செலவினங்களை செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 2002-2003ம் நிதியாண்டில் தொடர்ந்து அந்தந்தப் பள்ளிகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழக நிதிக்குச் சமமாக மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கப்பட்டது. அதன்படி 2006-2007 கல்வியாண்டிற்கு, உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக நிதித் தேவைப்படுவதால் பள்ளிகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் நிதிக்குச் சமமாக மாநகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கலாம் என்பதற்கு மாமன்றத்தின் இசைவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :318</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 21.12.2006**

*“ வான் தந்த மழை காப்போம் – வாழ்வுக்கு வளம் சேர்ப்போம் ”*

* * * * * *

**"கண்ணைக் காப்பது இமை"**
**"மண்ணைக் காப்பது மழை"**

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2006**ம் ஆண்டு டிசம்பர் திங்கள் **28-ம்** நாள் **வியாழக்கிழமை** காலை **12.30** மணிக்கு

**அறிஞர் அண்ணா மாளிகை**
**பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்**
**மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்**
**அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்**

1) **சி.டபிள்யு.3 /39181/ 2006**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 20.12.2006ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :319**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

2) **சி.டபிள்யு.3 /39182/ 2006**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 20.12.2006ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :320**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

3) **பி.11/ 31187/ 2006**

இம்மாநகராட்சியில் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு 1.07.2006 முதல் அகவிலைப்படி 24% லிருந்து 29% ஆக உயர்த்தி வழங்க, அரசாணை 578/ நிதி (ஓய்வூதியம்) துறை நாள். 14.09.2006 வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி 1.7.2006 முதல் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தில் அகவிலைப்படி 29% சேர்த்து வழங்க, வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு -** 5% அகவிலைப்படி உயர்வு 1.7.2006 முதல் வழங்குவதால் மாதம் ஒன்றுக்கு சுமார். ரூ.4,40,000/- உத்தேச கூடுதல் செலவு ஏற்படும்.
வ.கு.மேயர் அவர்களின் முன் ஒப்புதல் 6.10.2006-ல் பெறப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :321**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது**

4) **பி.11/ 31187/ 2006**

மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து 1.6.60 முதல் 31.5.88 வரை உள்ள காலங்களில் ஓய்வு பெற்று, ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கும் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கும் 1.6.88 முதல் ஓய்வூதியம் மறு நிர்ணயம் செய்து, திருத்திய ஓய்வூதியம் மற்றும் அதற்கான நிலுவைத் தொகைகள் வழங்க, அரசாணை எண். 579/ நிதி (ஓய்வூதிய) துறை, நாள். 15.9.2006 வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி மறு நிர்ணயம் செய்து, திருத்திய ஓய்வூதியம் மற்றும் அதற்கான நிலுவைத் தொகைகள் வழங்க, வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு -** வ.கு.மேயர் அவர்களின் முன் ஒப்புதல் 6.10.2006-ல் பெறப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :322**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

5) **மே.ம.வ.3/ 07794/ 2006**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.72 எச்.எம்.எஸ். காலனியில் "New Life Ministries" என்ற கிறிஸ்தவ திருச்சபைக்கு சொந்தமான கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி அதன் பாஸ்டரின் 9.8.2006 தேசிய மனு வாசிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு இடம் பார்வையிடப்பட்டது. இத்திருச்சபை கட்டிடம் சுமார் 8200 சதுர அடியில் அமைந்துள்ளது. இதில் சுமார் 3000 பேர் அமர்ந்து, ஆராதனை செய்யும் கிறிஸ்தவ திருச்சபை கூடமாக உபயோகத்தில் உள்ளது. இதில் வணிகம் பகுதி எதுவும் இல்லை. எனவே மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 122(a) ன் படி திருச்சபை கட்டிடத்திற்கு 01.04.2005 முதல் காலிமனை வரிவிதிப்பினை ரத்து செய்யவும், 01.04.2005 முதல் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :323**

**பொது மக்கள் வழிபாடு செய்யும் இடத்திற்கு மட்டும் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்க தீர்மானிக்கிறது.**

6) **ம.பொ.6/ ம.எண்.(G)1539/ 05**

மதுரை மாநகராட்சி மையப்பொறியியல் பிரிவு வார்டு எண். 65-ல் நேருநகர் 5வது தெரு, 6வது தெருக்களில் தார்சாலை அமைக்க வார்டு இளநிலைப் பொறியாளரால் ரூ.15,75,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்)-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் பெற்று மாமன்றத்தில் நிர்வாக ஒப்புதல் தீர்மானம் எண்.114, நாள். 29.6.2006-ல் பெறப்பட்டு, டெண்டர் வரவழைக்கப்பட்டது. டெண்டர் ஏதும் வரப்பெறாததால், மதிப்பீடு தற்போதைய விலை விகிதத்திற்கு திருத்தம் செய்து, திருத்திய மதிப்பீட்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் 18.8.2006-ல் பெறப்பட்டு மீண்டும் டெண்டர் வரவழைக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.96% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.M.M.கார்த்திகேயன், 204 D/1 பகத்சிங் முதல்தெரு, மதுரை என்ற முகவரியுள்ள ஒப்பந்ததாரரின் டெண்டரை ஏற்பு செய்ய மதிப்பாய்வுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது. 22.12.2006-ல் மதிப்பாய்வுக் குழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே திருத்திய மதிப்பீட்டுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலுக்கு பின்னேற்பு ஒப்புதலும், மேற்கண்ட டெண்டர்தாரருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :324**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) **ம.பொ.5/Est1583/05**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 45ல் உள்ள கிருதுமால் நதி ரோடு, பழைய மகாளிபட்டி ரோடு தார்சாலை மராமத்து மற்றும் பராமரிப்பு செய்யும் வேலைக்கு 2005-06 ம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.16,50,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத் தீர்மானம் எண் 48 / நாள் 29.6.06ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டு டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டன. அதில் திரு.J.ஜாவித் உசேன், 206, தெற்கு மாரட் வீதி, மதுரை என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.96% குறைத்து கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து மதிப்பாய்வுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :325**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

8) **ம.தி.1/36874/06**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தல்லாகுளம் கிராமம் புல எண்.84, 86/1 & 88/2-ல் உள்ள இடத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க நிலமாற்றத்திற்கு தடையில்லா சான்று வழங்க கோரியுள்ள மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.105001/06 ஒய்.2, எண்ணிட்ட 8.11.2006-ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு, மேற்படி இடமானது தல்லாகுளம் கிராமம் புல எண்.84-ல் கண்டுள்ள 0.86.0 ஹெக்டேர் மற்றும் புல எண். 86/1-ல் கண்டுள்ள 0.52.0 ஹெக்டேர் ஊரணி நிலம் அங்கீகரிக்கப்பட்ட புதூர் பாகம்-II விரிவு அபிவிருத்தி திட்டத்தின்படி பேருந்து துணை நிறுத்தம் (Reserved for Bus sub-terminal) நிலையத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடமாகும். புல எண்.88/2-ல் உள்ள 0.04.0 ஹெக்டேர் வாய்க்கால் பகுதியானது, தற்போது மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சம்பக்குளம் மெயின் ரோட்டையும், 120 அடி ரோட்டையும் இணைக்கும் தார் சாலையாகும்.

எனவே, புல எண். 84-ல் உள்ள 0.86.0 ஹெக்டேர் மற்றும் 86/1ல் உள்ள 0.52.0 ஹெக்டேர் ஊரணி நிலத்தில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க நில மாற்றம் செய்ய தடையில்லா சான்று வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :326**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**மாமன்ற தீர்மானம் எண் :327**

**இரண்டு மாமன்ற உறுப்பினர்கள் முன்மொழிய, மூன்று மாமன்ற உறுப்பினர்கள் வழிமொழிய 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் கீழ்க்கண்ட பிரேரணைகளை வாசித்தார்.**

பிரேரணை - 1

**மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படி மிகவும் குறைவாக உள்ளதால், மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுபடியை உயர்த்தி, சம்பளமாக மாதம் ரூ.5000/- வீதம் வழங்க அரசுக்கு தீர்மானம் வடிவில் பரிந்துரை செய்ய முன்மொழிகிறேன்.**

பிரேரணை - 2

**மாமன்ற உறுப்பினர்கள் அன்றாடப் பணிகளை கவனிக்க ஒவ்வொரு வார்டிலும் மாமன்ற உறுப்பினர்களுக்கென ஒரு அலுவலகம் வீதம் 72 வார்டிலும் கட்ட அனுமதி வேண்டி அரசுக்கு தீர்மானம் வடிவில் பரிந்துரை செய்ய முன்மொழிகிறேன்.**

**மேற்கண்ட இரண்டு பிரேரணைகள் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன், ஏகமனதாக அரசுக்கு பரிந்துரைத்து அனுப்பி வைக்க தீர்மானிக்கப்படுகிறது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி

மதுரை

மேயர்

நாள் : **26.12.2006**

மதுரை மாநகராட்சி

*"அகழிகள் இன்றில்லை – அகன்ற கிணற்றை அகழியாக்குவோம்"*

* * * * * * * *